பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885, Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 15

# நீடிக்கப்பட்டது தனிமைப்படுத்தல் ஊரடங்கு




நாட்டில் எதிர்வரும் 21ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டமானது, மேலும் எதிர்வரும் ஒக்டோபர் 01 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் ஒன்றுகூடிய கொவிட் ஒழிப்பு செயலணியுடனான கலந்துரையாடலின் போது இந்த நீடிப்புக்காலம் குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

ஏற்கனவே மருத்துவர்கள் நாட்டில் இன்னமும் கொவிட் வைரசின் திரிபான டெல்டாவின் தாக்கம் குறையவில்லை எனவும், சுகாதாரப் பரிசோதகர்களும் இவ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீடிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். தொடர்ச்சியாக வரக்கூடிய மாதங்கள் அதாவது எதிர்வரும் ஜனவரி வரை பண்டிகைகள் இருப்பதன் காரணமாக மக்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்புக்களைக் கருத்திற்கொண்டு, இவ்வருட இறுதிக்குள்ளேனும் நாட்டில் கொவிட் வைரசின் தாக்கத்தை இல்லாதொழிக்கும் நோக்கில், இவ் ஊரடங்கு சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்படவே வாய்ப்புக்கள் இருக்கிறது.

# இலங்கையின் மனித உரிமை நிலவரம் மோசமடைந்திருக்கிறது - ஐ.நா விசேட அறிக்கையாளர் ஃபெபியன் சல்வியொலி

இலங்கையின் மனித உரிமை நிலவரம் கடந்த 18 மாதங்களில் மிகவும் மோசமடைந்திருப்பதாக, ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீளிடம் பெறாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர் ஃபெபியன் சல்வியொலி (Fabion Salviyoli) தெரிவித்துள்ளார். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினது 48வது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தமது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க...)

# அதிபர் - ஆசிரியர்கள் போராட்டம் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது




ஆசிரியர்-அதிபர் வேதன முரண்பாடு தொடர்பான சந்திப்பு கல்வியமைச்சின் செயலாளர். மேலதிக செயலாளர். அதிபர் - ஆசிரியர் கூட்டமைப்பு பிரதிநிதகள் முதலியோருக்கிடையே விசேட கலந்துரையாடல் ஒன்று சில மணிநேரம் நடைபெற்றது. அதில் சில விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டபோதும். இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அரசாங்கம் பெரிய சிக்கலுக்குள் சிக்கியுள்ளது.
(03 ஆம் பக்கம் பார்க்க...)

## மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகிறார் ஜெயந்த கெட்டகொட

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய நிலையில், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை மீள் நிரப்ப, ஜெயந்த கெட்டகொடவின் பெயர் வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. இவர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்றம் பிரவேசிப்பதற்காக, தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை முன்னர் இராஜினாமா செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்காரவத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் திறக்க நடவடிக்கை



பொகவந்தலாவை சிங்காரவத்தை தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நோர்வூட் பிரதேசசபை உறுப்பினரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் இளைஞர் அணித் தலைவருமான பா.சிவனேசன் அவர்கள் தெரிவித்தார்.
(03 ஆம் பக்கம் பார்க்க...)

# தியாக தீபத்திற்கு அஞ்சலி



நல்லூர் பின் வீதியில் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் நேற்றைய தினம் மாலை 6 மணி அளவில் தியாக தீபம் திலீபனின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

### தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றவேண்டும்

நாட்டில் அமுல்படுத்தப் பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டமானது ஒக்டோபர் 01ஆம் திகதிவரை நேற்றைய தினம் நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் நாட்டை முற்றாக முடக்கினால் பாரிய பிரச்சினைகள் எழும். இதன் காரணமாக ஓரளவு தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மக்கள் வீதிகளில் இறங்கி பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

மரக்கறி வகைகள் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. மக்களை தொடர்ந்தும் வீடுகளில் முடக்கிவைத்திருக்க முடியாத நிலை இருக்கிறது. பொருளாதாரப் பிரச்சினை குடும்பங்களிலும் நாட்டிலும் தலையெடுத்துள்ளது.

எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் தொடர்ந்தும் செயற்படவேண்டும். வீதிகளில் நடமாடுகிறோம் என சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றமறக்காதீர்கள். கொவிட் அச்ச நிலைமை இன்னமும் நாட்டில் இருக்கிறது. டெல்டாவின் தாக்கம் வீழ்ச்சியடையவில்லை. இன்னும் பல திரிபுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை உலக நாடுகளுக்குப் பரவலாம் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

பொலிசாரினால் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்றும் 613 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அலட்சியமாக வீதிகளில் பயணிக்கவேண்டாம் என தொடர்ந்தும் மக்களை அறிவுறுத்துகின்றனர்.

உங்களுக்கான தடுப்பூசிகள் வருகின்றபோது உரிய முறையில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள் என சுகாதாரத் துறை கேட்டுள்ளது. இன்றும் 4 மில்லியன் சைனோபார்ம் தடுப்பூசிகள் சீனாவில் இருந்து வந்துள்ளன.

இந்நிலையில் இவ் அசாதாரன காலப்பகுதியில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களிடம் அறவிடப்படும் அபராதத்தை. 100,000 ரூபா வரை அதிகரிப்பதற்கான திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன என்பதை கவனத்திற்கொள்க!

## ஐ.நா பயணமானார் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நியுயோர்க் நோக்கி இன்று (18) காலை பயணமாகியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத் தொடரில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனுக்கு விளக்கமறியல் - மனைவி மற்றும் மாமாவுக்கு பிணை

**ஹிஷாலினி வழக்கு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் அவர்கள் மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும் மாமனார் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

## பட்டதாரி பயிலுநர்களின் பயிற்சிக் காலம் நீடிப்பு

*பட்டதாரி பயிலுநர்களின் பயிற்சி கால எல்லையை டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்க தீர்மானித்துள்ளதாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.*

**நாட்டில் மேலும் 121 கொவிட் மரணங்கள் நேற்று (17.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,938 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 2078 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 500,772 ஆக அதிகரித்துள்ளது.**

## அனுராதபுர தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்துங்கள் – சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

**அனுராதபுரத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.**



அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை மதுபோதையில் அனுராத புரம் சிறைச்சாலைக்குள் தனது சக பாடிகளுடன் பிரவேசித்த விடயதானத்திற்கு பொறுப்பாகவிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் முழந்தாளிடச் செய்து இருவரை மிக மோசமாக அச்சுறுத்தியுள்ளார். அத்துடன் காலணிகளை நாக்கால் சுத்தம் செய்யுமாறு மனித விழுமியங்களுக்கு முற்றிலும் முரணான மிலேச்சத்தனமான செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாகவும் குரலற்றவர்களுக்கான குரல் அமைப்பின் தலைவர் கோமகன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்விதமான செயற்பாடுகள் இந்த நாட்டில் சிறுபான்மையினத் தேசிய இனங்களை தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. ஆகவே, இத்தகைய குரூரமான மனோநிலை கொண்டவர்களிடத்தில் நீதியை, நியாயத்தினை எதிர்பார்க்க முடியுமா என்பதும் அப்பட்டமாக வெளியாகியுள்ளது.

தற்போது இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலை விடயதானத்திலிருந்து மட்டும் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இந்த செயற்பாட்டை அரசாங்கம் குறித்த விடயத்திற்கான பொறுப்புக்கூறலாக படம் காட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

மேலும், சிறைச்சாலை நிருவாகம் இவ்விதமான சம்பவம் ஒன்றே நடைபெறவில்லை என்கிறது. இராஜாங்க அமைச்சர் சிறைக்குச் சென்றேன் மதுபோதையில்லை என்று வாக்குமூலம் கூறுகின்றார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அனுமதிப்பத்திர துப்பாக்கியை வைத்திருந்தார் இராஜாங்க அமைச்சர் என்கிறார்.

இவ்வாறு பல விநோதமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. இதனைவிட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை தீவிரமாக முன்னெடுப்பதாகவும் கூறுகின்றது. இந்த ஆணைக்குழு கடந்த காலங்களில் எத்தனை விடயங்களுக்கு நீதியை நிலைநாட்டியிருக்கின்றது என்பது ஊறறிந்த உலகறிந்த விடயம். ஆக இந்த விசாரணைக்குழுவின் முடிவு இப்போதே தெரிந்ததொன்றே.

இந்த நிலையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மிகுந்த பாதுகாப்பு அச்சத்திற்கு உள்ளாகியிருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இலங்கையின் வரலாற்றில் வெலிக்கடை, மகசீன், அனுராதபுர கலவரங்களும் கைதிகள் படுகொலை விடயங்களும் தமிழர்களை மையப்படுத்தியே அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

அவ்வாறிருக்கையில், மிக சொற்பமான எண்ணிக்கையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு திரைமறைவில் தீட்டப்படும் திட்டங்களால் ஆபத்துக்கள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் வெகுவாகவே ஏற்பட்டுள்ளது. இதனைவிட, அதிகாரத்தில் உள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு எதிராக சாட்சியமளிக்கின்றபோது அவர்களின் பாதுகாப்பு நிச்சயம் கேள்விக்குறியாகும். காரணம், சிறை அதிகாரிகளும் இந்த விடயத்தில் நியாயமாக நடந்துகொள்ளும் மனோநிலையில் இல்லை. ஆகவே வேறெந்த காரணங்களை வைத்தும் தமிழ் அரசியல் கைதிகள் பழிவாங்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை.

எனவே, அவர்களின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்தவேண்டும். அதற்கு முதற்கட்டமாக அவர்களை வடக்கு கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்றவேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என்று கூறப்பட்டுள்ளது.

## சிவில் சமூக இயங்குதளத்தின்...

(நேற்றைய இதழின் தொடர்ச்சி...)

என்ற கட்டுப்பாடுகளை முன்வைக்க ஆரம்பித்துள்ளனர். மேலும், மாவட்ட மட்டங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் துஸ் பிரயோகம் மற்றும் மரியாதைக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகினற்னர். அமைச்சரவையை சேர்ந்த அமைச்சர்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ற பதப்பிரயோகத்தை தாக்குதல் மிக்க வகையில் பயன்படுத்தி அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எதிரான கலாச் சாரம் ஒன்றை வளர்த்தெடுக்க முனைகின்றனர், இது அரசசார்பற்ற நிறுவ னங்கள் அரசாங்கம் மற்றும் அடையாளம் காணப்பட முடியாத தரப்புகளிடம் இருந்து மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட காலப்பகுதிக்கு ஒத்ததாக அமைகின்றது.

தன்னார்வ சேவை நிறுவனங்கள் (VSSO) சட்டத்தினை மாற்றி யமைக்கும் அமைச்சரவை தீர்மானம் தொடர்பில் எமது கரிசனைகளை இங்கு நாம் குறிப்பிட விரும்புகின்றோம். இவ்விவகாரம் தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டணி அரசசார்பற்ற நிறுவனங்களின் செயலகத்துடன் பகிர்ந்து கொள்ளும் மற்றும் பணிபுரியும் கரிசனைகள் இங்கு கருத்திற்கொள்ளாமல் விடப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்டுள்ள சட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் ஈடுபாடு பெயரளவில் மாத்திரம் நின்று விடாமல் அது கருத்தாழம் மிக்க வகையில் அமைந்திருக்க வேண்டியதுடன் சிவில் சமூகத்தின் சட்டரீதியான கரிசனைகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். மேலும், புதிய சட்டம் மனித உரிமைகள் மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பில் சிவில் சமூக நிறுவனங்கள் சுதந்திரமாக பணிபுரிவதற்கு கொண்டுள்ள உரிமைகளை மட்டுப்படுத்துவதாக அல்லது அந்நிறுவனங்க ளின் செயற்பாட்டில் தேவையற்ற தடைகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக் கக்கூடாது.

2. பொது அமைப்புகளின் சுயாதீனம் இலங்கையின் அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட 20வது திருத்தம் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதித்துறை, சட்டமா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற பல பொது நிறுவனங்களின் சுயாதீனத்தன்மை க்கு குந்தகம் விளைவித்துள்ளது. இச்செயற்பாடு மனித உரிமைகள் மீறல்க ளால் பாதிக்கப்பட்ட மக்கள் தீர்வுகளை பெற்றுக்கொள்வதை இலகுபடுத் தும் முக்கிய வகிபாகமொன்றைக் கொண்டிருக்கவேண்டிய இவ்வாறான பொது நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்காணி க்கும் மற்றும் மேற்பார்வை செய்யும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகளின் சுயாதீனத்தன்மைக்கு குந்தகம் விளைவித்தமை சட்டத்தின் ஆட்சி தொடர்பாக அத்துடன் வகைகூறும் மற்றும் வெளிப்படைத் தன்மை மிக்க ஆட்சியை வழங்க நாம் கடப்பாடு கொண்டுள்ளோம் என்ற அரசாங்கத்தின் கூற்றினை கேள்விக்குட்படுத்தும் வகையில் அமைந்து ள்ளது.

3. பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) பாரிய மனித உரிமை மீறல்களு க்கு வழிவகுத்த மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக அத்துடன் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் மக்களு க்கு எதிராக விகிதசமமற்ற அளவில் பிரயோகிக்கப்பட்ட பயங் கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டும் என்ற எமது கோரிக் கையை நாம் மீள வலியுறுத்துகின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு ஏற்ப அரசாங்கம் நியமித்துள்ள ஆலோசனைச் சபை தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துகின்றோம். எவ்வாறாயினும், இந்த ஏற்பாடு பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் இணைந்துள்ள துஸ்பிரயோ கத்தன்மையினை அகற்ற, நீண்ட காலம் நிருவாகக் கிளையினால் தடு த்து வைக்கப்படுவதை முன்தடுக்க அல்லது குற்றங்களை ஒப்புக்கொள்ள வைக்க சித்திரவதையை பயன்படுத்துவதை இல்லாதொழிக்க போதிய ஏற்பாடாக இது அமையவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள “வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையை கொண்டிருப்பதற்கெதிரான தீவிரமயமற்றதாக்குதல்” ஒழுங்கு விதிகள் பற்றிய எமது கரிசனையினையும் வெளியிடுகின்றோம், இவ்வொழுங்குவிதிகள் எதேச்சையான கைது செய் தல், தடுத்து வைத்தல் அத்துடன் குற்றமிழைத்தோரை நீதித்துறையின் செயற்பாடுகள் அல்லாமல் நிறைவேற்றுத்துறையைப் பயன்படுத்தி அவர்க ளின் குற்றங்களை ஒப்புக்கொள்ள வைப்பதை ஏற்படுத்தும், இது குறிப் பிட்ட நபரின் நியாயமாக நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படும் உரிமையை மீறுவதாக அமைகின்றது. மேலும் இவ்வொழுங்குவிதிகள் இன ரீதியான / மத ரீதியான வகைப்படுத்தல்களை இலகுபடுத்தும் விதத்தில் அமைந்துள் ளதாக தோன்றுவதுடன் அது பாகுபாடு மிக்கதாக அமைகின்றது.

அண்மையில் அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறை யிலடைக்கப்பட்டிருந்த 16 சிறைக் கைதிகளை (ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ்) விடுதலை செய்ததுடன் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றங்களில் இருந்து அவரை விடுவித்தது.

(அடுத்த இதழில் தொடரும்...)

## இலங்கையின் மனித உரிமை...

இலங்கையில் உண்மை மற்றும் நீதியைத் தேடுவதற்கான நடவடிக் கைகள் போதிய அளவு முன்னெடுக்கப்படவில்லை. கடந்த 18 மாதங்க ளில் மனித உரிமை நிலவரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. பொறுப்புக்கூறல் விடயங்களிலும் முன்னேற்றமில்லை. இந்த விடயங்கள் நிலைமாறுகால நீதி வழங்கல் செயல் முறையையும் பாதித்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும் அரசாங்கம் தமது பொறுப்புக் களை நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, யுத்தம் நிறைவுபெற்று பத்தாண்டுகளைக் கடந்து விட்டபோதிலும் சர்வதேச சமூகங்களை மற்றும் தமிழ் மக்களை ஏமாற்றும் போலியான வேலைத்திட்டங்களையே மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் செய்து வருகின்றன. மாறாக தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் விடயத்தில் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றதே தவிர, ஆட்சியா ளர்கள் தமிழ் மக்களுடன் பேசுவதற்குக் கூட தயாராக இல்லை. வடகிழக்குப் பகுதிகளில் மிகுதியாக இருக்கக்கூடிய தமிழர் பகுதிகளையும் பௌத்த விகாரைகளை அமைப்பதன் ஊடாக சிங்களக் குடியேற்றங்களை உருவா க்கி தமிழினத்தை இந்நாட்டில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திட்டமிட்ட வகையில் தமிழர் வணக்கஸ்தலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றது. இரவோடிரவாக பௌத்த பிக்குகளால் புத்தரின் சிலைகள் நிறு வப்படுகின்றது. கேட்பதற்கு யாருமில்லை. பொலிசாரும் அவர்கள் பக்கம் சார்ந்து நிற்கும் நிலையில் இந்நாட்டில் யாரிடம் நீதியை எதிர்பார்க்க முடியும். ஜனநாயக நாட்டிற்குரிய பண்புகளைப் பின்பற்றாமல் அடாவடித்தனங்கள் உச்சக்கட்டத்தைத் தொட்டுத் தொடர்கின்றன.

## அதிபர்–ஆசிரியர்கள்...

ஏனெனில், எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள, தேசிய பரீட்சைக ளான க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 2,922 விண்ணப்பங்களும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு 6,589 விண்ணப்பங்களும் கல்வி அமைச்சுக்குக் கிடைக்கப் பட்டுள்ளமையே ஆகும். உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பத் திகதி முடிவடைந்த நிலையில் இந்த சிக்கல் எழுந்துள்ளது. சாதகமான தீர்வு எழுத்து மூல வடிவம் கிடைக்கப்பெறும் தறுவாயில், அதிபர் - ஆசிரியர்கள் போராட்டத் தைக் நிறுத்துவார்கள் இல்லை எனில் போராட்டம் பல வழிகள் - வடிவங்கள் ஆக பரிணாம வளர்ச்சியுடன் தொடரும் என்று ஆசிரியர் கூட்டமைப்பு பிரதி நிதிகள் கல்வி அமைச்சுக்குத் திட்டவட்டமாக தெளிவுறுத்தியுள்ளனர்.

ஆசிரியர், அதிபர்கள் மீதான மேலதிகாரிகளின் அழுத்தம் மற்றும் ஆசி ரியர்களின் மேலதிக வேலைகள் தொடர்பாகவும் கல்வி அமைச்சு செயலாளர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. எதிர்வரும் காலங்களில் கா.பொ.சாதாரண தர பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளமையால், அரசாங்கம், அதி பர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்காவிடின், எதிர்காலத்தில் இந்த போராட்டம் இன்னும் உக்கிரம் அடைந்து, அரசாங்கம் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாகிய நிலை ஏற்படும்.

எனவே, மேதகு ஜனாதிபதியவர்களும், மாண்புமிகு பிரதமர் அவர்க ளும் நாட்டின் கல்வியில் கரிசனை கொண்டு, உடனடியாக தீர்வைப்பெற்றுத் தரவேண்டும். இல்லாவிடின் ஆசான்கள் வஞ்சிக்கப்பட்ட ஆட்சிக்காலம் என வரலாறு எழுதும்.

(புயல்நேஷன், செயலர், CTSU Northern.)

## சிங்காரவத்தை சிறுவர்...

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர் எம்.கிருஸ்ணா)

களனிவெளி பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட பொகவந்தலாவை சிங்காரவத்தை தோட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையம் கடந்த ஒரு மாத காலமாக மூடப்பட்டுள்ளமையி னால் தொழிலுக்கு செல்லும் தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ள னர்.

இது தொடர்பில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்ட தலைவர் மற்றும் வட்டார இளைஞரணி அமைப்பாளர் சதீஸ்மேனன் ஆகியோர் எனது கவனத்திற்குக்கொண்டு வந்ததையடுத்து தோட்ட நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு பேசியபோது கொரோனா தொற்று அச்சம் காரணமாக களனிவெளி கம்பனிக்குட்பட்ட தோட்டங்களிலுள்ள அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மூடுமாறு கம்பனியிலிருந்து எங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. எனவே தான், சிங்காரவத்தை தோட்டத்திலுள்ள சிறு வர் பராமரிப்பு நிலையத்தையும் மூடினோம். என்னும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் குறி த்த சிறுவர் நிலையத்தை மீண்டும் திறந்து இயங்க செய்ய நடவடிக்கை எடுப்பதாக தோட்ட நிர்வாகம் தன்னிடம் உறுதியளித்துள்ளதாக சிவனேசன் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் தொடரிலிருந்து விலகிய நியூசிலாந்து

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)



ராவல்பிண்டியில் தொடங்குவதாக இருந்த நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான வெள்ளைப்பந்து கிரிக்கெட் தொடரை நியூசிலாந்து முற்றிலும் கைவிட்டதாக அறிவித்தது. முதல் ஒருநாள் போட்டியின் டொஸ் போடவிருந்த சில நிமிடங்களுக்கு முன்பாக ஒட்டுமொத்த தொடரிலிருந்துமே விலகுவதாக நியூஸிலாந்து அதிர்ச்சி அறிவிப்பு வெளியிட்டது. பாதுகாப்பு காரணங்கள் கருதி தொடரில் பங்கேற்கவேண்டாம் என்று நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம்தான் இந்த அதிர்ச்சி முடிவை எடுத்துள்ளது. இதனையடுத்து 3 ஒருநாள் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடர் இரத்து செய்யப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு 18 ஆண்டுகளுக்குப் பிறகு வந்தது. நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம், தன் வீரர்களை அறையிலேயே இருக்குமாறும் களத்தில் இறங்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளது. இரு அணிகளுமே ஹோட்டல் அறைகளை விட்டு வெளியே வரவில்லை. பார்வையாளர்களுக்கும் ஸ்டேடியத்தில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. நியூசிலாந்து பாதுகாப்பு ஆலோசகர்கள், பாகிஸ்தானுக்கு இருக்கும் அச்சுறுத்தலை சுட்டிக்காட்டி நியூசிலாந்து தொடரை ரத்து செய்ய பணித்திருக்கிறது. இதனையடுத்து நியூசிலாந்து அணி பாகிஸ்தானிலிருந்து புறப்பட தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்ததுடன், இது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தலையில் பேரிடியாக இறங்கியது.

ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தன் அறிக்கையில், தாங்களும் அரசும் முழு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தோம் என்று கூறியுள்ளது. பிரதமர் இம்ரான் கான், தனிப்பட்ட முறையில் நியூசிலாந்து பிரதமரிடம் தங்களிடம் மிகத்துல்லியமான உளவுத்துறை உள்ளது என்றும் வருகை தரும் அணிகளுக்குரிய முழு பாதுகாப்பு உத்தரவாதமும் உண்டு என்றும் உறுதி அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 77 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை - யுனிசெப்

unicef

for every child

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்று காரணமாக கடந்த 18 மாதங்களாக ஏறக்குறைய 77 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல வில்லை என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்று நோயால் உலகம் கல்வி நெருக்கடியை எதிர் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. வியாழக்கிழமை. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தனது சமூகவலைத்தளங்களை 18 மணிநேரங்களுக்கு முடக்கி கூடிய விரைவில் தனிப்பட்ட கற்றலுக்காக பாடசாலைகளை மீண்டும் திறக்கவும் என உலகிற்கு ஒரு செய்தியை அனுப்பியுள்ளது. மொத்த மாணவர் சனத்தொகையில் 7.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 117 மில்லியன் மாணவர்கள் 18 நாடுக ளில் முழுமையாக பாடசாலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஓரளவிற்கு பாடசாலைகள் திறக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 52 லிருந்து 41 ஆக குறைந்துள்ளது.

18 மாத காலத்திற்கு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் 77 மில்லியன் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. நீண்ட காலமாக பாடசாலைகள் மூடப்பட்ட அனைத்து நாடுகளிலும். இணைய வழி கல்வி. அச்சிடப்பட்ட குறிப்புகள். தொலை க்காட்சி மற்றும் வானொலி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தை பொறுத்தவரை. ஒவ்வொரு சிறுவர்களின் வளர்ச்சி. பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு பாடசாலைக்கு செல்லும் உரிமை முதன்மையாக உள்ளது. இந்நிலையில் யுனெஸ்கோ மற்றும் அதன் மற்ற அமைப்புகள் பாடசாலைகள் பாதுகாப்பாக மீண்டும் திறக்க வேண்டும் என வலியுறுத்தி வருவதுடன் முழு மூடுதலையும் கடைசி முயற்சியாக பயன்படுத்துமாறும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

## பூமிக்கு பத்திரமாக திரும்பிய சீன விண்வெளி வீரர்கள்

அமெரிக்கா, ரஷ்யாவை போலவே சீனாவும் தங்கள் நாட்டுக்கென பிரத்தியேக விண்வெளி நிலையத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த விண்வெளி நிலையத்தை உருவாக்க தேவையானவற்றை எடுத்துச் சென்று அதை கொஞ்சம் கொஞ்சமாக கட்டமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் சீன விண்வெளி வீரர்கள் மூன்று பேர், ஜூனில் விண்வெளி நிலையத்திற்கு சென்றனர். மூன்று மாதங்கள் அங்கு தங்கி இருந்து விண்வெளி நிலையப் பணிகளை செய்து முடித்தனர். விண்வெளி நிலையத்தில் இருந்து சீன அதிபருடன் 'வீடியோ கொன்பரன்ஸ்' வாயிலாக உரையாடினர். சீன வரலாற்றிலேயே அதிக நாட்கள் விண்வெளியில் தங்கி பணியாற்றியவர்கள் என்ற பெருமையை இந்த மூன்று வீரர்கள் பெறுகின்றனர்.

பணிகள் முடிவடைந்த நிலையில் மூன்று வீரர்களும் விண்வெளி நிலையத்தில் இருந்து புறப்பட்டு நேற்று பத்திரமாக பூமிக்கு திரும்பினர். சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள மங்கோலியப் பகுதியில் மூன்று வீரர்களும் தரை இறங்கினர். சீன விண்வெளி நிலையம் அடுத்த ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வரும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

